# செப்டம்பர் - 29 - வெள்ளி

## அதி தூதர்கள் மிக்கேல் கபிரியேரல் ரபாயேல்

**நீரே இறைமகன் நீர் இஸ்ராயேல் மக்களின் அரசர்'' (யோவான் 1:42)**

## முதல் வாசகம் : தானியேல் 7 : 9 – 10, 13 – 14

நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன. தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார் அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சு போலவும் இருந்தன் அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும் அதன் சக்கரங்கள் எரி நெருப்பாயும் இருந்தன.அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடை தோன்றிப் பாய்ந்தோடி வந்தது் பல்லாயிரம் பேர் அவருக்குப் பணிபுரிந்தார்கள். பலகோடி பேர் அவர்முன் நின்றார்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அமர்ந்தது் நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. இரவில் நான் கண்ட காட்சியாவது் வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார் இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார் அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார்.ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்கு கொடுக்கப்பட்டன் எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும் அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும் அதற்கு முடிவே இராது் அவரது அரசு அழிந்து போகாது.

**பதில்பாடல் :** ஆண்டவரே தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்

## நற்செய்தி : யோவான்1: 47 – 51

அக்காலத்தில் நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, "இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்" என்று அவரைக் குறித்துக் கூறினார்.நத்தனியேல், "என்னை உமக்கு எப்படித் தெரியும்?" என்று அவரிடம் கேட்டார். இயேசு, "பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்திமரத்தின்கீழ் இருந்த போதே நான் உம்மைக் கண்டேன்" என்று பதிலளித்தார்.நத்தனியேல் அவரைப் பார்த்து, "ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்" என்றார்.அதற்கு இயேசு, "உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்" என்றார்.மேலும் "வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று அவரிடம் கூறினார்.

**தியானம் :** இன்றைய நாளில் திருச்சபையானது அதிதூதரான மிக்கேல், கபிரியேல், இரபேல் அவர்களின் பெருவிழாவைக் கொண்டாகின்றது. இவர்களுக்கு விழா எடுக்கும் நாங்கள் இத்தூதர்களின் செயற்பாடுகளை பின்பற்றி வாழ அழைக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொரு தூதர்களும் உணர்த்தும் ஒரே செயற்பாடு கடவுள் நம்மோடு வாழ்கின்றார் என்பதுவே. நம்மைப் பாதுகாப்பதிலும், நம்மை வழிநடத்துதலிலும் குணப்படுத்துவதிலும் இத்தூதர்களின் பங்கேற்பு கடவுள் நம்பிக்கையை எமக்கு உணர்த்துகின்றது. ஆனால் மனிதர்களாகிய இறைவன் காட்டிய வழியை விட்டுவிட்டு உலகம் காட்டிய வழியை சுலபமாக சென்றுவிடுகின்றோம். நற்செய்தியில் இயேசு நத்தனியேலைப் பார்த்து இதோ உண்மையான இஸ்ராயேலன், கபடற்றவன் என்கின்றார். இயேசுவின் இவ்வார்த்தைகள் எமக்குப் பொருந்துமா? நாம் செல்கின்ற பாதை கடவுளின் பாதையா? எனவேதான் இன்று தூதர்களுக்கு விழா கொண்டாடும் நாமும் இறைவனின் உடனிருப்பு எந்நாளும் நமக்கு உண்டு என்ற நம்பிக்கையில் ஆழப்பட இறைத்தூதரிகளின் துணை வேண்டுவோம்.